

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு தனி நாடு வேண்டும் என்று, இலங்கை தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர் தினத்தந்தி- 26-5-75

சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2006, ஆனி 1, ஐ: ஆகிர் 4, (15-6-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 46

- சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின்
- இன ஒழிப்புக் கொடுமையை எதிர்த்து

# இலண்டனில் ஆர்ப்பாட்டம்!

# ஈழவிடுதலை முன்னணியின் போர்க்கோலம்!

இலண்டனில் இவ்வாரம் நடைபெற்ற இலங்கை உட்பட உலக நாடுகள் பங்கு பற்றிய கிரிகெட் ஆட்டத்தின் போது—வெவ்வேறு நாடுகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில்—இலங்கை சிங்கள அரசின் தமிழ் இன ஒழிப்புக்கொள்கையை கண்டித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை இலண்டனிலுள்ள ஈழவிடுதலை முன்னணியினர் நடத்தினர்!

இலங்கை சிங்கள அரசின் இன ஒழிப்புக்கொள்கையை கண்டித்தும் தமிழ் ஈழ சுதந்திர முழக்கத்தை எழுப்பியபடியும்—கையில் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமும், ஈழவிடுதலை முன்னணியினர் கிரிக்கட் ரசிகர்கள் மத்தியில் நடத்திய இந்தத் திடீர் ஆர்ப்பாட்டம்—பல்வேறு நாடுகளிலிருந்தும் கிரிக்கட் ஆட்டத்துக்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களை வெகுவாகக் கவர்ந்தது.

இம்மாதம் 11ம் திகதி அவுஸ்ரேலியாவுக்கும் இலங்கை கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட்போட்டி ஈழவிடுதலை முன்னணியினரின் ஆர்ப்பாட்டம் காரணமாக ஐந்து நிமிடம் தடைபட்டது. கையில் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் 11 ஈழவிடுதலை முன்னணி வீரர்கள் விளையாட்டுமைதானத்தை ஆக்கிரமித்தனர். இவர்களை பொலிசார் தூக்கி அப்புறப் படுத்திய பொழுது, இன்னோர் ஆர்ப்பாட்டக் குழுவினர் எதிர்ப்பக்கமிருந்து மைதானத்துக்குள் நுழைந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இது சம்பந்தமாக ஈழவிடுதலை முன்னணியின் செய்தி இதழான 'ஈழவிடுதலை' எழுதியிருப்பதாவது:


"இலங்கையில் தொடர்பாக நடந்துவரும் சிங்கள எதேச்சாதிகார அரசாங்கங்களினது இனத்துவேஷ நடவடிக்கைகளை உலகின் கவனத்துக்குக்கொண்டுவரு

—5-ம் பக்கம் பார்க்க

## சிறிமாவோவின் அலறல்!

"தமிழரசுக் கட்சியினர் இலங்கையில் பிரசாரத்திலீடுபடுவதை விடுத்து பிரிட்டனில் பிரசாரம் செய்யமுற்பட்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலும் இதனைச் செய்கிறார்கள். சர்வதேச ரீதியில் சைப்பிரஸ் போன்ற நாடுகளில் உள்ளது போன்ற நிலையை இங்கு ஏற்படுத்தவே தமிழரசுக் கட்சியினர் இதனைச்செய்கின்றார்கள். தென்னிந்தியா சென்று தமிழருக்கு வேலைவாய்ப்பு இல்லை, சலுகைகள் இல்லை என்று பிரசாரம் செய்கிறார்கள். இதற்கான எதிர்ப்பிரசாரத்தை நாம் செய்யவேண்டும்!"

—பிரதமர் சிறிமா பண்டாரநாயகா
(தினகரன் 8-6-75)



## வீரன் வண்ணை ஆனந்தன் விடுதலையானார்!

### மூன்று ஆண்டுகள் இனத்துக்காக சிறையிருந்த செம்மல் இவர்!

கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழினத்தின் உரிமைகளைக் கோரியதற்காக சிங்கள ஏகாதிபத்தியத்தினால் இருட் சிறைக்கோட்டத்துக்குள் தள்ளப்பட்டிருந்த வண்ணை ஆனந்தன் அவர்கள் 10.6.75 அன்று விடுதலைசெய்யப்பட்டார். தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆகக் கூடுதலான காலம் சிறையிருந்தவர் என்கிற தனிப் பெருமையையும் வண்ணை ஆனந்தன்பெறுகிறார்!



வண்ணை ஆனந்தன் 1972ம் ஆண்டு யூன் மாதம் 10ம் திகதி கைதுசெய்யப்பட்டவர், 1975 யூன் 10ம் திகதி விடுதலை செய்யப்பட்டார்! கடந்த மூன்று ஆண்டு காலமாக வெலிக்கடை சிறையில் எவ்வித விசாரணையுமின்றி அடைத்துவைக்கப்பட்டிருந்தார் இளைஞர் வண்ணை ஆனந்தன்.

இறுதியில் சிங்கள அரசாங்கம்—அவருக்கு எதிராக வழக்கு எதையும் தாக்கல் செய்ய முடியாத நிலையில் வேறு வழியின்றி அவரை விடுதலை செய்தது. மே 15ம்

—8-ம் பக்கம் பார்க்க




### சிலையானான் நம் நெஞ்சில்நிலையானான்

தியாகி சிவகுமாரன் சிலை 5-6-75ல் உரும்பராயில் திறந்து வைக்கப்பட்டது. சிலை திறக்கப்படுவதற்கு முன்னர் விழாவுக்கு தலைமை தாங்கிய கவிஞர் காசி ஆனந்தன் தலைமையுரை நிகழ்த்துவதையும், சிலையை சிறைமீண்ட இளைஞர் முத்துக்குமாரசாமி திறந்து வைப்பதையும் இங்கு காணலாம். படத்தில் தந்தை செல்வாவும் காணப்படுகிறார்.

வெளிவருகிறது — ஈழவேந்தன் எழுதிய
'தமிழ் மண் காப்போம்—தாயகம் மீட்போம்'
சுதந்திரன் வெளியீடு-4—விலை ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




இளைய தியாகராஜ்,
தெமோதரை

கே: மாதக்கணக்கில் அரசாங்க ஆதரவு ஊது குழல்களாலும் முட்டாள் போக்கு முண்டங்களாலும் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டு நடந்து முடிந்த ஒரு மைப்பாடு மாநாடு புஸ்வாண மாகிவிட்டதே! ஏன்?

ப: மக்கள் ஆதரவு பெருத எந்த மாநாடும் புஸ்வாண மாகிவிடுவது தவிர்க்கமுடியாதது! ஒருமைப்பாடு மாநாடு புஸ்வாணமானலும் மாநாடு நடத்திய எருமைகளுக்கு' நல்ல 'புல்லு' கிடைத்திருக்கிறதாம்!

*

வே. சித்திரா
நொச்சிமுனை
மட்டக்களப்பு

கே: தாங்களே நாட்டை ஆள்வதாக ஆளுங்கட்சிக்கு வால்பிடித்துத் திரியும் ஒரு சில தமிழ்த்துரோகிகள் பிதற்றித்திரிகிறார்களே...!

ப: அவர்கள் இப்போது பிடித்துத்தொங்கும் சேலைத் தலைப்புடன் தலைகுப்புற விழுகின்ற காலம் அதிக தூரத்தில் இல்லை — அப்போது தங்கள் வீட்டை ஆளுகின்ற அதிகாரம் கூட இன்றி இவர்கள் விரட்டியடிக்கப்படுவார்கள்! பொறுத்திருந்துபாருங்கள்!

எம். கே. இலகவகுமார்
கிளிநொச்சி.

கே: சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களில் எவர் மீதாவது இதுவரை வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா?

ப: கிடையாது!

கே: காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகியோரின் முகவரி என்ன?

ப: காசி ஆனந்தன், அமிர்தநதி, மட்டக்களப்பு, மாவை சேனாதிராசா, மாவிட்டபுரம், தெல்லிப்பளை!

*

புனிதம்,
புன்னாலைக்கட்டுவன்

கே: தமிழ் நாடு அமைத்து தமிழரசு நிறுவுவோம் என்று கூறும் போதே தமிழர் சிலர் மனம் கொதிப்பதன் காரணம் யாது?

ப: அறியாமை!

கே: தமிழர் ஒருவர் இன்னொரு தமிழரைச் சந்திக்கும் போது இன்றும் ஆங்கிலத்திலேயே உரையாடுகிறார்களே — இந்நிலை என்று மாறுமோ?

ப: தமிழன் நாட்டில் தனித்தமிழாட்சி ஏற்படும் போதுதான் தமிழனின் இந்த அடிமைப்புத்தியும் அறவே நீங்க வழி பிறக்கும்!

*

நா. தவானந்தன்,
தோப்புக்காடு
காரை நகர்

கே: சிங்கள ஸ்ரீயை எதிர்த்தீவர்களே இன்று ஸ்ரீகார்களில் பவனிவருகிறார்கள் என்று நண்பர்கள் எங்களைக் கேட்கின்றனர்; இதற்கு நாம் என்னபதிலளிப்பது!

ப: சிங்கள 'ஸ்ரீ' யென்பது சிங்கள ஏகாதிபத்தியம் என்னும் மூல நோயின் அறிகுறி. நோயின் அறிகுறிக்கு வைத்தியம் செய்வதை விடுத்து, 'அறுவை சிகிச்சை' மூலம் (அதாவது தனிநாடு அமைப்பதன் மூலம்) நோயை முற்றாக நீக்கி விடுவது என்று முடிவு செய்துவிட்டோம்! தமிழ் ஈழம் தமிழர் கையில் வந்துவிட்டால் பின் நாங்கள் வைத்ததுதானே சட்டம்? அதன் பின்னர் சிங்கள ஸ்ரீக்களுக்கு இடமேயில்லாமற்போய் விடுமே!

*

க. ரா. ஈஸ்வரா
இடைக்காடு
அச்சுவேலி

கே: தனிநாட்டின்கொடி எல்லோருடைய வீட்டிலும் கம்பீரமாக பறந்தால் என்ன?

ப: பறந்தால் என்னவா? நிச்சயம் பறக்கவேண்டும்!

*

செல்வி. வே. தவம்,
சித்தங்கேணி

கே: பௌர்ணமி விழா கொண்டாடும் தமிழ் இளைஞர்களைப்பற்றி யாது நினைக்கிறீர்கள்?

ப: தமிழர் மரபுப்படி, தமிழ்க்கலை வளர்க்கும் நோக்குடன் பௌர்ணமி விழாக் கொண்டாடினால் அதில் தவறு ஏதும் இல்லை! சித்திரைப் பௌர்ணமி விழாவை பூம்புகாரில் தமிழக முதல்வர் தலைமையில் பெருவிழாவாக நடத்தினார்களே!

*

கே. எம். ருசிக் பரீத்
மாத்தறை

கே: ஒரு சில மந்திரிகள் சிறிமா அம்மையாரின் சேலைத் தலைப்பைப் பிடித்துத்தொங்குவதேன்?

ப: ஏதாவது ஒன்றைப் பிடித்து தொங்குவதுதானே மந்தி(ரி)களின் இயற்கைக் குணம்! அப்படித் தொங்காவிட்டால் அதலபாதாளத்தில் வீழ்ந்து விடுவார்களே!

கே: பொண்ணுக்குத் தங்க மனசு — ஆணுக்கு என்ன மனசு?

ப: (ஓரிடத்திலும்) தங்கா மனசு!

*

அ. சர்வநாதன்,
பெரியபுலம்
நாரந்தனை.

கே: தந்தை செல்வா பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஏன் அமரவில்லை?

ப: அவர் தமிழ் ஈழக் குடியரசுத் தலைவர் பதவியிலேயே அமருவார்!

*

பி. லோகநாதன்,
கிளிநொச்சி.

கே: கிளிநொச்சியில் நாட்டம் கொண்டுள்ள குமாரசூரியரை சந்திக்க 4தடவை போனேன். அவர் எந்நேரமும் பொலிஸ் பாதுகாப்போடு இருக்கிறார். அவரை அணுகவே பயமாக இருக்கிறது. அவரை அணுகினால் 4வது மாடியே நினைவு வருகிறது. அவரை தனியாக சந்திப்பதற்கு ஒரு வழி சொல்லுங்கள்!

ப: குமாரசூரியரை தனிமையில் சந்திக்கவேண்டுமானால் இன்னும் சில காலம் காத்திருங்கள் — அடுத்த பொதுத்தேர்தலின் பின்னர் காவி கமண்டலங்களுடன் கையில் ஜால்ராவுடன் வீட்டில் தனிமையாக இருப்பார்! அப்போது சென்றீர்களானால் நீங்களும் ஒரு ஆச்சல் அவரோடு சேர்ந்து அழுது தீர்த்துவிட்டுத் திரும்பலாம்!

*

யேசுபாலன்,
கொழும்பு 6

கே: தந்தைசெல்வா அவர்கள் தேசிய அரசுப்பேரவையில் 'தனிநாடு' கோரிக்கையை இன்னும் ஏன் முன் வைக்கவில்லை?

ப: 'தனிநாடு' தேசிய அரசுப்பேரவையின் முன் வைத்து பெறும் ஒரு கோரிக்கையல்ல! 'தனிநாடாக' தமிழ் ஈழம் இயங்குவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டு விட்ட நிலையில் பிரகடனப்படுத்தப்படவேண்டியதே 'தனிநாடு'! அத்தகைய சூழ்நிலை உருவாகும் சமயத்தில் —தந்தை செல்வா பேரவையில் 'தனிநாடு' பிரகடனத்தைப் படிப்பார்!

*

கே. இராசேஸ்வரி
கொழும்பு-11

கே: சுதந்திரன் ஆசிரியர் கோவை அண்ணாதான் சுடருக்கும் ஆசிரியர் என்கிறேன் நான். இல்லை என்கிறாள் என் தோழி. இதில் யாருக்கு வெற்றி?

ப: வெற்றி உங்களுக்குத்தான்!

*

சி. கிருஷ்ணபிள்ளை
64 மேற்கு மார்க்கட்டு
யாழ்ப்பாணம்

கே: சுதந்திரன் பத்திரிகை தட்டுப்பாடாக இருக்கிறது அது உங்களின் தவரு அல்லாவிட்டால் ஏசன்சியின் தவரா?

ப: சுதந்திரன் விற்பனை முகவர் (ஏசண்ட்) கேட்கும் பிரதிகளையே நாம் அனுப்புகிறோம். சுதந்திரன் தட்டுப்பாடாக இருக்குமிடங்களில் அந்தந்த பகுதி முகவரை (ஏசண்டை) கேளுங்கள்!

*

பி. சின்னத்தம்பி
கல்குடாரோட்
வாழைச்சேனை

கே: எனது வீட்டிலேயுள்ள நாய் சிலவேளைகளில் அதே வீட்டிலுள்ள பசுவைக் கடிக்கப்போகுதே மனிதர்களிலும் இப்படிப்பட்டோர் உண்டு. அம்மனிதரை எப்படி அழைக்கலாம்?

ப: இரண்டுகால் நாய்கள் என்று அழைக்கலாம்!

*

கே. செல்வராஜ்
36, மன்னார் வீதி
புத்தளம்

கே: தனித்தமிழ் நாடு கோரிக்கை வெற்றி பெற்ருல், ஏனைய சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ்ப் பேசும் இனத்தின் நிலை என்ன?

ப: அவர்கள் தமிழ் ஈழத்துக்கு திரும்பி சுதந்திர மக்களாக தலை நிமிர்ந்து வாழலாம்: அப்படியின்றி அவர்கள் சிங்கள நாட்டில் வாழ்ந்தாலும், அவர்களது நலன்களை தமிழ் ஈழநாட்டு அரசு கவனிக்கும்!

*

செ. அன்ரனிபெர்னண்டோ
அளம்பில்

கே: இவ்வாண்டு எமது அன்புத்தோழன் சிவகுமாருக்காக நினைவு விழா எடுக்கவில்லையா?

ப: ஜூன் 5ம் நாள் பெருவிழா எடுத்து சிலை நிறுவப்பட்டுவிட்டது.

கே: ஈழத்தமிழினம் சுதந்திரமாக வாழ ஒரு வழி சொல்லுங்கள்!

ப: முதலில் தமிழினம் சுதந்திரமாய் வாழ்வதற்கு தன்னைத் தயார் செய்து கொள்ளவேண்டும்!

திருவாளர் குயுக்தியார்,
194 எ. [illegible]

கேள்வி அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

# சங்கப் பலகை

நூல்:- தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்.

ஆசிரியர்: சு. யேசுராசா.

விலை: 2 ரூபா.

சிற்றம்பலமான அவனது உள்ளத்திலே தேவரீர் கழலொலி என்ன நாதத்தை எழுப்புகிறது தெரியுமா? சோகம், முடிவற்ற சோகம்; நம்பிக்கை வரட்சி. என்று ஒரு குறுங்கதையில் எழுதினான் புதுமைப்பித்தன். சமூக பொருளாதார அரசியற் காரணங்களால் சோகமும், நம்பிக்கை வரட்சியும் மனித வாழ்க்கையில் ஏற்படலாம். ஆனால் நம்பிக்கையின்மையும் விரக்தியும் உந்தித்தள்ள எழுத்தாளன் உலகைவிட்டு ஒதுங்கவேண்டுமா?

யேசுராசாவின் கதைத் தொகுதியைப் படித்து முடித்ததும் எனக்கு இந்தக் கேள்வியைத்தான் கேட்கத் தோன்றுகிறது,

அவருடைய அனுபவங்களின் சித்தரிப்பு வாசகனை ஒரே வீச்சிற் பற்றக் கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனல் 'அகவியல நோக்கு' மட்டுமே பல கதைகளில் அமைந்திருப்பதனல் அக்கதைகள் பூரணமான கலைப்படைப்பாகக்கொள்ள முடியாதிருக்கிறது. வெக்கங்கெட்டவர்கள், பிரிவு, கடவுள் உறங்குகிறார் போல ஆகிய கதைகள் இதற்கு அப்பாற்பட்டனவாக அமைந்திருக்கின்றன.

ஒன்றிலும் தெளிவில்லாமலும் 'மனிதனாக இருக்கும் இயல்புடையவனை' மனிதனிலேயே நம்பிக்கையில்லாமலும் எழுதுவதில் யாருக்கு என்ன லாபம்? புறநிலச் சார்பை எழுத்தாளன் இழந்துவிடுவதானல் அவன் யாருக்காக எழுதவேண்டும்? 'கலைகலைக்காக' என்ற தத்துவத்தை யேசுராசா நிலை நாட்ட முயல்கிறாரா?

இந்தச் சிக்கல்களிலிருந்து விடுபடுவாராஞல் எதிர் காலம்—மிகச் சிறந்த எதிர் காலம் யேசுராசாவிற்கு உண்டு என்பது அவர் கதை சொல்லும் பாணியிலிருந்து அறியமுடிகின்றது. ஆனல் "எங்களுக்குப் புற உலகைப் பற்றிக் கவலையில்லை. எங்கட உலகம் எங்களுக்குள்ளேயே இருக்கு. அதிலேயே எங்களுக்குத் திருப்தி அதிலேயே எங்களுடைய வாழ்க்கை முடிஞ்சு போகும்" என்று அவருடைய 'பிரிவு' என்ற கதையில் வரும் கதாபாத்திரம் போலப் பிடிவாதமாக இருப்பின்தொடங்கியஇடத்திலேயே அவருடைய இலக்கிய வாழ்வும் முடிந்துவிடலாம். ஆம் மக்களுக்காக இலக்கியஞ் செய்யாதவனை மக்களும் மறந்துவிடுவார்கள் என்பதை இளம் எழுத்தாளர்கள் உணரவேண்டும்.

●

நூல்: கனவுப் பூக்கள்.

எழுதியவர்கள்: சௌமினி; சிவம்.

விலை: இரண்டு ரூபா.

சௌமினியுப் சிவமும் எழுதிய 56 பக்கங்களையுடைய கையடக்கமான கவிதைத் தொகுதி இது. சௌமினியின் பாடல்கள் கனவுகளாகவும் சிவத்தின் பாடல்களிற் பெரும்பான்மையான வை குத்தல்களாகவும் அமைந்துள்ளன. இருவரிடமுமே 'கவித்துவம்' உள்ளது என்பதை உணரமுடிந்தாலும் மரபுக் கவிதைகள் எழுதுவது கஷ்டமானது என்ற முடிவின் பின்னர் புதுக்கவிதைகளுக்குத் திரும்பினார்களோ என்ற ஐயப்பாடு நமக்கு ஏற்படுகின்றது.

இன்று அச்சுக்கோப்பவன் தான் மிகச் சிறந்த கவிஞன் என்றுசிலபுதுக்கவிதைகளைப் படிக்கையில் நான் நினைப்பதுண்டு. ஒரு வசனத்தை முறித்து முறித்து எழுதிவிட்டால் அது கவிதையாகிவிட முடியாது என்பதற்குப் பல உதாரணங்கள் இந்நூலிலும் இருக்கின்றது. எனினும் பொன்னலரிப் பூச்சொரிந்த புழுதித்தெரு, கனவுகளின் புலம்பல், நியதி ஆகிய கவிதைகள் இருக்கக்கூடியதாக அமைந்துள்ளன.

—ஈழநாமம்

# "கண்ணகி போன்ற வீராங்கனைகளாக தமிழ் பெண்கள் மாறவேண்டும்!"

—பொங்கல் விழாவில் நங்கத்துரை பேச்சு!

சேனையூர் சம்புக்களி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல்விழா கடந்த 26-5-75 திங்கட்கிழமை இரவு கடற்கரைச் சேனைப்பாரதி மன்ற தலைவர் க. ப. சாமித்தம்பி தலைமையில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளராக [illegible] திரு. அ. தங்கத்துரை அவர்கள் கலந்துகொண்டார்.

அவர் தனது உரையின் போது கூறியதாவது:

மே 22ம் திகதி வியாழக்கிழமை நடந்த சட்டமறுப் பின்போது திரண்ட எழுச்சி அணியைக் கண்டேன். அதில் தாய்மார்களும் அதிகமாகப் பங்குபற்றினார்கள். அதே போல் இங்குள்ள தாய்மார்களும் விடுதலைப்போராட்டங்களில் பங்குபற்றவேண்டும். வீரத்தெய்வமான கற்புக்கரசி கண்ணகிக்கு விழா எடுக்கும் நாம் எமது விடுதலை பற்றிச் சிந்திக்கவேண்டும் அதற்கு எம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

"இப்படியான சமய சம்பந்தமான விழாக்களில் இதையெல்லாம் ஏன் கூறுகிறேனென்றல் விடுதலை

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலையாக வந்தான்! நம் நெஞ்சில் நிலையாக நின்ருன்!!

அன்பு நண்பா,

தோகை விரித்தாடும் கலாபமென இதயம் ஆனந்தக் கூத்தாடுகிறது; உள்ளம் சிலிர்த்திடுகிறது உவகையால்; கண்கள் இரண்டும் ஆனந்தக் கண்ணீரைச் சொரிகின்றன; களிப்புத் தாங்காது கால்கள் வானத்தில் பறக்கின்றன; கடமை தவரு விடுதலை வீரனே வாழ்க, தியாகப் பெருஞ் சுடரே வாழ்க, தீயோரைச் சுட்டெரிக்கும் தீச் சுடரே வாழ்க, திருவிடமாம் தமிழ் ஈழத்தின் திறல் வீரன் பகத்சிங்கே வாழ்க, இளந் தமிழ்த் தலைமுறையின் இணையற்ற தலைவா வாழ்க, என்னருமைத் தம்பியே வாழ்க—என்று வாய் வாழ்த்துரைத்திடுகிறது;என்னையே மறந்தேன் — தன்னையே தமிழ் இனத்துக்காக தந்திட்ட தம்பி சிவகுமாரனின் சிலை முன்னல் மண்டியிட்டு நின்றேன்—யூன் ஐந்தாம் தாள்!

ஆம் யூன் ஐந்து—தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத நாளாகி விட்டது! 1956 யூன் ஐந்தாம நாள்தான்—தமிழினத்தை தாழ்த்திய சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழர் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் ஈழ விடுதலைப் படை முதன் முதலாக அறப்போர்க் களம் கண்ட நாள்! சிங்கள வெறியர்களின் மிருகத்தனமான தாக்குதலுக்கு ஆளாகிய போதும்—தந்தை செல்வாவும் தலைவர் வன்னிய சிங்கமும் கொட்டும் மழையிலும் கொள்கைவழுவாது அறப்போர் நடாத்திய நாள்! அருமை நண்பர் தாமரைக்குளம் செல்லையாவின் தமிழ்க் காது சிங்கள வெறியர்களினல் ருசி பார்க்கப்பட்ட நாள்! தளபதி அமிர்தலிங்கத்தின் நெற்றி பிளந்து அதிலிருந்த பீறிட்டெழுந்த செங்குருதி காலி முகத்திடலை ஈரமாக்கிய நாள்!

இந்த அறப் போராட்டம் நடைபெற்று சரியாகப் 18 ஆண்டுகள் கழித்து—1974ம் ஆண்டு அதே யூன் 5ம் நாள்தான் மறத் தமிழ் வேங்கை சிவகுமாரன் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து துப்பாக்கி தூக்கி வீர சாகசப்போராட்டம் நடத்தினன்—முடிவிலே தன் உயிரையும் அர்ப்பணித்தான்! தமிழர் நெஞ்சில் அழியா ஓவியமாஞன்! காவியப் புலவர்களுக்கு கருப்பொருளாஞன்!

இந்த ஆண்டு யூன் 5ம் நாள்—சிவகுமாரன் மறைந்து ஓராண்டு பூர்த்தியான அன்று—அந்த வீரன் பிறந்து வளர்ந்து விடுதலைப் போராட்டத்துக்கு பயிற்சிபெற்ற வீர மண்ணுன உரும்பராயில் சிவகுமாரனுக்கு சிலையெடுத்து பெருவிழா நடத்தியிருக்கிருர்கள் வீரத் தமிழ் இளைஞர்கள்!

திட்டமிட்டபடி வீரன் சிவகுமாரனின் முதலாவது ஆண்டு நினைவு நாளன்று இந்தச் சிலையை நிறுவுவதற்கு ஓய்வு ஒழிச்சலின்றி ஓடியாடி உழைத்தவர்களும் அதற்கு உறுதுணையாக இருந்தவர்களும் அருமையான சிலையை உருவாக்கித்தந்த சிற்பக் கலைஞரும்—சிலை நிதிக்கு தாராளமாக நிதி உதவியை வாரி வழங்கிய தமிழ் மக்களும்—தமிழ் சமுதாயத்தின் நன்றிக்கும் பாராட்டுக்குமுரியவர்கள்!

நண்பா, சிவகுமாரனின் சிலைத் திறப்பு நாளன்று யாழ் நகரெங்கும் கரை புரண்டோடிய எழுச்சியையும் விடுதலை உணர்ச்சியையும் எப்படி வர்ணிப்பேன்? உரும்பராய் நோக்கி அலை அலையாக வந்து சேர்ந்த மக்கள் வெள்ளத்தின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்த விடுதலைத் தீயும், தமிழுணர்வும் கண்டு நான் செய்த தியாகம் வீண்போகவில்லையென்று சிவகுமாரனின் ஆத்மா நிச்சயமாகப் பூரித்திருக்கும்!

தியாகி சிவகுமாரனின் சமாதிக்கு தமிழ் இளைஞர்கள் — மாணவர்கள், மாணவிகள் அணி அணியாக வந்திருந்து அஞ்சலி செய்த காட்சியும்—சமாதியில் அவர்கள் சிந்திய கண்ணீரும் சூட்டிய மலர் மாலைகளும் எடுத்த உறுதிமொழிகளும் நெஞ்சுருக வைப்பனவாகும்! சிவகுமாரன் ஊட்டிய வீரம் அவர்கள் நெஞ்சங்களில் அழுத்தமாக ஊறியிருந்ததற்கு இது எடுத்துக்காட்டாக இருந்தது!

உரும்பராய் கிராமத்தின் வீதியெங்கும்—நிறைந்து காணப்பட்ட துப்பாக்கியும், குண்டாந்தடிகளும் ஏந்திய நூற்றுக்கணக்கான பொலிசாரைப் பற்றி கொஞ்சமும் பொருட்படுத்தாமல்—நம் வீர மாணவ மாணவிகள் தங்கள் உயிருக்குயிரான உடன் பிறப்பான சிவகுமாரனின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தியதும், சிலைத் திறப்பு விழாவில் பல்லாயிரக் கணக்கில் கலந்துகொண்டதும்—இளம் சந்ததியிடத்தில் வளர்ந்து வரும் அஞ்சாமையையும் இலட்சிய உறுதியையும் எடுத்தியம்பிற்று!

தள்ளாத வயதிலும் — தமிழர் தந்தை செல்வா அவர்கள் நேரடியாக வந்திருந்து வாழ்த்துரை வழங்கிட — தளபதி நாவலர் அமிர்தலிங்கமும், கடமைவீரர் நவரத்தினமும், கிளிநொச்சி செயல் வீரர் ஆனந்தசங்கரியும் இளைஞர்களின் உளம்கவர்ந்த இளைஞர் யோகேஸ்வரனும் இன்னும் பல தமிழர் கூட்டணிப் பிரமுகர்களும் உள்ள நிறைவுடன் அமர்ந்திருந்திட — தமிழர் கூட்டணியின் அமைப்புச்செயலாளர் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் — தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்தேசிய கீதத்தை முழங்கிட தமிழர் கூட்

## அரசியல் மேடை

டணியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான இளைப்பாறிய மாவட்ட நீதியரசர் பெரியார் திரு. எஸ். தம்பித்துரை அவர்களின் புதல்வனும் தமிழ் ஈழவிடுதலைப்போராட்டத்தில் சிறைசென்று மீண்ட நல் முத்தான வீர இளைஞர் முத்துக்குமாரசாமி தியாகி சிவகுமாரனின்சிலையை திறந்துவைத்த காட்சி உயிருள்ளளவும் மறக்கமுடியாத உன்னதக் காட்சியாகும்!

அரிமாபோல கம்பீரமாகக் காட்சி தருகின்ற சிவகுமாரனின் அந்த வீரத் திருவுருவம்—கோழையையும் வீரனுக்கும் வசிகரம் பொருந்தியது! எட்டப்பர்களுக்கு, இனத்துரோகிகளுக்கு சிவகுமாரனின் சிலை ஒரு எச்சரிக்கை! இன விடுதலைக்குப் போராடுபவர்களுக்கு அது ஒரு எழுச்சிப் படைக்கலன்! நம் வீர இளைஞர்களுக்கு அது ஒரு வழி காட்டும் ஒளிவிளக்கு! திசையறிகருவி!!

"வீரத்தமிழ் இளைஞர்களே! இனத்தின் விடுதலைக்காக உங்களை ஒப்படையுங்கள்! என்னைப்போல தீவிரமாகப்போராடுங்கள்! ஆனல் இயக்கத்தை— இனத்தை — தெரிந்தோ தெரியாமலோ—பிளவுபடுத்தக் கூடிய எந்தக் காரியத்திலும் இறங்கிவிடாதீர்கள்! நீரடித்து நீர் விலகுதில்லையென்பதை மறந்துவிடாதீர்கள்—கைவிரல் சிலசமயங்களில் கண்ணில் குத்தினல், கைவிரலை யாரும் வெட்டியெறியமாட்டார்கள்— இதை உணர்ந்து கட்டுக்கோப்புடன் செயற்படுவீர்" —என்று இளையோருக்கு அறிவுரை கூறுகிருன் சிவகுமாரன் - சிலை வடிவில் நின்று!

"சிங்கள ஏகாதிபத்தியமே! உன் அடக்குமுறையும் சர்வாதிகாரமும் அதிகரிக்குமாஞல்—என் தமிழ் இனத்து இளைஞர்கள் மேலும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள்! அஹிம்சையை மூட்டை கட்டி வைத்துவிட்டு—அவர்கள் கைகள் ஆயுதம் தூக்கவேண்டிய ஒரு சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்துவீர்களாஞல் — தமிழர்கள் வெறும் கோழைகள் அல்ல என்பதை அப்போது உணர்வீர்கள்! தமிழ் இளைஞன் எந்த நிலையையும் சந்திக்க தயார்!"—என்று ஆட்சியாளருக்கு அறைகூவல் விடுகிருன் சிவகுமாரன் சிலை வடிவில் நின்று!

"தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து வயிறு கழுவும் துரோகிகளே! திருந்திவிடுங்கள்! துரோகப் பாதையிலிருந்து திரும்பிவிடுங்கள்! இன விடுதலைக்குப்போராட வாருங்கள்! தமிழ் இளைஞர்களை — உங்கள் துரோகத்தனத்தின் மூலம் விரக்தியின் விளிம்புக்குத்தள்ளி—உங்களுக்கு நீங்களே கொள்ளிவைத்துக்கொள்ளாதீர்கள்—" என்று எட்டப்பர்களுக்கு எச்சரிக்கை விடுகிருன் சிவகுமாரன் சிலை வடிவில் நின்று!

"வீரத்தமிழ்த் தாய்க்குலமே! என் வீரத் தாய் என்னை தமிழ் ஈழவிடுதலைப்போருக்கு முற்று முழுதாக அர்ப்பணித்ததுபோல—ஒவ்வொரு வீரனை—வீட்டுக்கொரு பிள்ளையை—விடுதலை இயக்கத்துக்கு [illegible]களாகத் தாருங்கள்! புறநானூற்றுத் தாய்மார்களாக மாறுங்கள்!"—என்று தமிழ்த்தாய்க் குலத்துக்கு வேண்டுகோள் விடுக்கிருன் சிவகுமாரன் சிலைவடிவில் நின்று!

"தமிழர் கூட்டணியே! ஈழ விடுதலைக்கு அஹிம்சை வழியிற் போராடுவதென்ருலும் — விரைந்து போராடு! வேகமாகப்போராடு! காலம் கழிந்துகொண்டிருக்கிறது; தமிழர் நிலங்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் கபளீகரம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன; பொறுமைக்கு இனி இடமில்லை! தந்தை செல்வாவின் காலத்திலேயே தமிழ் ஈழம் சுதந்திரமாகட்டும்! உதயசூரியன் கொடி தமிழ் ஈழத்தின் தேசியக்கொடியாக உயரப்பறக்கட்டும்! தாயின்மணிக்கொடியாக மலரட்டும்!"—என்று தமிழர் கூட்டணிக்கு இடித்துரைக்கிருன் சிவகுமாரன் சிலை வடிவில் நின்று!

சிவகுமாரன் சிலை இன்னும் பல கூறும்—எழுச்சியை யூட்டும்—உற்சாகத்தைத் தரும்—ஊக்கத்தையும் வேகத்தையும் ஏற்படுத்தும்! காலம் காலமாக தமிழர் நெஞ்சில் விடுதலைப் பேருணர்வை வளர்த்துக்கொண்டேயிருக்கும்!

ஆம்—குலையாத கொள்கை வீரன் சிவகுமாரன் சிலையாகவந்தான் — நம் நெஞ்சில் நிலையாக நின்ருன்! அவன் புகழ் வாழ்க! அவன் இலட்சியம் வெற்றிபெறுக!

உன் நண்பன்

கோவை-மகேசன்

## மட்டுநகர் மந்தி!

மட்டு மாநகரில்—ஒரு
மந்தி இருக்குதடா!

வட்டுக் கோட்டையிலும்—அதுபோல்
மற்ருென்று வாழுதடா

சட்டம் எனும்நரியும்—அதற்கு
சார்பாய இருக்குதடா!

பட்டம் பதவிகளால்—அதுமிகப்
பருத்துக் கிடக்குதடா!

ஏவல் நாய்களெல்லாம்—அதன்
இனிய நண்பர்களாம்!

காவல் காக்குதடா—அவையிதன்
கயமையைப் போற்றுதடா!

தென்னை மரக்கள்ளை—இனத்துடன்
சேர்ந்து குடிக்குதடா!

தன்னை உணராமல்—தெருக்களில்
தாவித் திரியுதடா!

செய்ய தமிழர்களைக்—கண்டால்
சீறிச் சினக்குதடா!

பைய விலகிநின்ருல்—அவர்களைப்
பாய்ந்து கடிக்குதடா!

விலங்கு என்பதனல்—இதுவரை
விலகி வாழ்ந்துவந்தோம்!

இலங்கு தமிழினத்தை—தொடர்ந்து
இம்சைப் படுத்துவதால்...

அன்னதன் செய்கைகட்கு—பயந்து
அடிமைக ளாவதுவோ?

சொன்னதை செய்பவர்நாம்-இனியதன்
சொத்தை யுடையுமடா!

—செல்லைச்செல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மதத்திணிப்பு

இலங்கை முழுவதையும் தனி பௌத்த சிங்கள நாடாக்கி—ஒரு பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் தமிழ்த் தேசிய இனத்தை அமிழ்த்தி காலப்போக்கில் முற்றாக அழித்தொழிக்கக்கூடிய நடவடிக்கைகளை சிங்கள அரசாங்கம் திட்டமிட்டு தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

அந்நிய ஏகாதிபத்தியங்கள் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தனவோ—எப்படி எப்படி செயற்பட்டனவோ—அதேபோல—அதையும்விட மோசமான முறையில்—சிங்கள ஏகாதிபத்தியம் இங்கு செயற்பட்டு வருகிறது!

புதிய அரசியல் சட்டம், சிங்களவருக்கே நிரந்தர ஆட்சியுரிமையை பிரகடனப்படுத்தியிருக்கிறது; தனிச் சிங்களத்திணிப்பை வலுவாக்கி உறுதிப்படுத்திவிட்டது; புத்தமதத்துக்கு அரசாங்க அந்தஸ்தை அளித்திருக்கிறது!

தனிச் சிங்களத் திணிப்பு—தமிழ் நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிப்பு—தமிழ் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பறிப்பு—தமிழ் கலாசார வளர்ச்சித் தடுப்பு—ஆகிய ஏகாதிபத்திய வெறித்தனங்கள் வேகமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இப்போது பெரும்பான்மை சிங்களவர்கள் பின்பற்றும் புத்த மதத்தை தமிழ் மக்கள் மீது திணிக்கும் முயற்சிக்கும் அரசாங்கத்தின் ஆதரவு பூரணமாக உண்டு என்பதை அமைச்சர் மைத்திரிபாலசேனநாயகா பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்!

ஆம், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் என்கிற பௌத்த சிங்கள வெறிபிடித்த அமைப்பின் மூலமாக தமிழர் மத்தியில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல புத்த மதத்தை திணித்துவிட திட்டம்போடுகிறது சிங்கள ஏகாதிபத்தியம்!

இதே பௌத்த காங்கிரஸ்தான் முன்னர் தேசிய அரசாங்க காலத்தில் மாவட்டசபைகள் நிறுவுவதை எதிர்த்து முறியடிப்பதில் முன்னணி வகித்தது; இதே பௌத்த காங்கிரஸ் மாநாட்டில்தான் கோணேசர் கோவிலை பௌத்த கோவிலாக்க வேண்டுமென்று முன்னர் ஒரு முறை தீர்மானம் வந்தது! இதே பௌத்த காங்கிரஸ்தான் புத்தூரிலும், கரவெட்டியிலும் ஏழைத் தமிழ்ப் பிள்ளைகளை புத்த மதத்துக்கு மாற்றி—சிங்கள பௌத்த பள்ளிக்கூடங்களை அங்கு நிறுவி—தமிழ் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணித்தது!

தமிழர் நாட்டில்—தமிழர் மத்தியில்—தமிழ் பிள்ளைகளை ஆசைகாட்டி புத்த மதத்தில் சேர்த்து—அவர்களுக்கு சிங்களத்தை திணிப்பதற்காக—அங்கு பௌத்த சிங்கள பள்ளிக்கூடங்களை நிறுவிய செயலுக்காக—பௌத்த காங்கிரசின் முதுகில் தட்டிக்கொடுத்து பாராட்டிய அமைச்சர் மைத்திரிபாலா—தமிழ்ப் பிள்ளைகளைப் பிடித்து பௌத்த பிக்குகளாக்க வேண்டுமென்றும், இதற்கு அரசு எல்லா உதவியையும் நல்கும் என்றும் கூறியிருக்கிறார்!

அமைச்சரின் இந்தக்கூற்று இதுவரை மறுக்கப்படாததனால் அதை உண்மையென்றே கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்!

இவ்வாறு அரசாங்கத்தின் வெளிப்படையான ஆதரவுடன் தமிழ் மக்கள் மத்தியில் புத்த மதத் திணிப்பை கனகச்சிதமாக செய்து வருகிறது பௌத்த காங்கிரஸ். யாழ்ப்பாணத்தில் மேலும் இரு புத்த விகாரைகளை கட்டப் போவதாக அறிவித்திருக்கிறது. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலும் புத்த கோவில் கட்டப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் நாகவிகாரைக்கு எதிரில் மூன்று இலட்சம் ரூபா செலவில் பௌத்த யாத்திரிகர் விடுதி கட்டப்படுகிறது!

**தமிழர்கள் எந்த மதத்துக்கும் விரோதிகளுமல்ல மதத் துவேஷிகளுமல்ல—மத வெறியர்களுமல்ல! ஆனால் ஏகாதிபத்தியம் எந்த உருவத்தில் வந்தாலும் ஆதிக்கவெறி எந்த வடிவத்தில் வந்தாலும்—அது மதமென்றாலும் சரி, மொழியென்றாலும் சரி—தமிழ் மக்கள் அதை எதிர்த்துப் போராடியே தீருவார்கள்!**

இந்நாட்டில் சிங்கள பௌத்தர்களிடையே—தமிழ் சைவர்களோ— கிறித்தவர்களோ — இஸ்லாமியர்களோ—ஊடுருவல் செய்ய நினைக்கவும் இல்லை; சிங்கள பௌத்தர்களை மதமாற்றம் செய்யும் முயற்சியில் அணுவளவும் ஈடுபடவுமில்லை! சிங்கள பௌத்த வாலிபர்களை தமிழ் மதக்குருமாராக முயற்சிக்கவும் இல்லை!

**ஆனால் தமிழ் மக்கள் மத்தியில்—பௌத்த மதத்தை திணித்தும் தனிச் சிங்களத்தைப் புகுத்தியும் தமிழ் மக்களிடையே ஒரு பிரிவை, பிளவை ஏற்படுத்தி அதன் மூலம் தமது ஏகாதிபத்திய ஊடுருவலை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசாங்கமும், அதன் கருவியான பௌத்த காங்கிரசும் திட்டமிட்டு செயல்படுகின்றன. பௌத்த விகாரைகளை தேவைக்கு விஞ்சி யாழ்ப்பாணத்தில் கட்டுவதும்,—தமிழ் பிள்ளைகளை புத்தபிக்குகளாக்க முயற்சிப்பதும் இதையே காட்டுகின்றன.**

ஏற்கெனவே புத்த குருமாராக்குவதற்கென சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆசைகாட்டி வடக்கிலிருந்து தெற்கே கொண்டுவரப்பட்ட தமிழ்ப் பிள்ளைகள் சிலர் எவ்வளவு கேவலமாக—எவ்வளவு மோசமாக—எவ்வளவு மிருகத்தனமாக நடத்தப்பட்டு—கண்ணீரும் கம்பலையுமாக அவர்கள் திரும்பிச் சென்றார்கள் என்பதை அப்போது சுதந்திரனில் எடுத்துக்காட்டியிருக்கிறோம்!

எனவே இது விஷயத்தில் தமிழ் மக்கள்—குறிப்பாக சைவ இளைஞர்கள்—கண்ணும் கருத்துமாக இருந்து ... படவேண்டும்! சைவ மன்றங்கள் அரசுக்கு ஆமாம் சாமிகளாக—தலையாட்டி பொம்மைகளாக—இராது துணிவுடன் பௌத்த திணிப்பை எதிர்த்து போராட முன் வர வேண்டும்!

அன்று ஆதிக்க வெறியுடன் வந்த கிறித்தவ மதத் திணிப்பை எதிர்த்து ஆறுமுகநாவலர் எவ்வளவு தீவிரமாக போராடினரோ—அதைவிட தீவிரமாக ஏகாதிபத்திய வெறியுடன் நுழைய முயலும் சிங்கள பௌத்த ஆதிக்கத்தை எதிர்த்து தமிழ் மக்கள் வீரமுடன் போராட வேண்டிய காலம் வந்திருக்கிறது!

**மீண்டும் கூறுகிறோம்—புத்தமதம் மீது தமிழ் மக்களுக்கு துவேஷம் எதுவும் கிடையாது—ஆனால் அது தம்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு—குதிரை விடுவதற்கு—தமிழ் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்!**

# ஆக்கிரமிப்பாளர்களே!

# தமிழ் ஈழத்திலிருந்து வெளியேறுங்கள்!

இலங்கை வாழ் தமிழ் மக்களை இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை தமிழ்ப் பிரதேசங்களிற் சிங்களக் குடியேற்றமாகும். இலங்கை சுதந்திரமடைவதற்கு முதலே இதற்குரிய திட்டம் சேனநாயக்காவால் தீட்டப்பட்டுவிட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் இத்திட்டங்கள் மிகவும் துரிதகதியில் நிறைவேற்றப்பட்டன. இதிற் சிங்கள அரசியற் கட்சிகளிடையே வேறுபாடு இல்லை. ஐ. தே. கட்சிதான் சிங்கள மக்களைத் தமிழ்ப் பிரதேசங்களிற் குடியேற்றியதாகச் சிலர் கூறித் தமது துரோகத்தனத்தைமறைக்க முயலுகின்றனர் 1951ம் ஆண்டு வரை திரு. பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா போன்றவர்கள் ஐ. தே. கட்சியில் இருந்தார்கள் உண்மையில் 1931ம் ஆண்டு முதல் பண்டாரநாயக்கா அமைச்சராக இருந்தார். சிங்கள குடியேற்றப் பிரச்சினையிலும் சரி மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை 1949ம் ஆண்டு பறிக்கப்பட்டபோதும் இவர்கள் ஐ. தே. கட்சியில் இருந்து இச்சதித் திட்டங்களுக்கு உடந்தையாக இருந்தார்கள். அத்துடன் சு. கட்சி அரசாங்கங்கள் அமைத்த போதும் தமிழ்ப் பகுதிகளிற் சிங்களக் குடியேற்றத்திற்கு வழி வகுத்தார்கள். இன்று வரை சிங்களவர்கள் தமிழ்ப் பகுதிகளிற் குடியேற்றப்படுகிறார்கள்.

தமிழ் மக்கள் காடுவெட்டி விவசாயம் செய்யும்போது இராணுவத்தைக் கொண்டு அவர்களை வெளியேற்றும் அரசாங்கம் சிங்கள மக்களை அரசாங்கப் பணத்திற் தமிழ்ப் பகுதிகளிற் குடியேற்றுகிறது இதற்குப் பெயர்தான் சோசலிசம்; முற்போக்கு! கிழக்கு மாகாணம் படிப்படியாகச் சிங்கள ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ளது. தமிழ்ப் பிரதிநிதி பாராளுமன்றத்துக்கு சென்ற விடத்திற்கு இன்று அம்பாறையிலிருந்து ஒரு சிங்களப் பிரதிநிதி செல்கிறார்! நாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன அடுத்த பொதுத் தேர்தலில் ஒரு சிங்களப் பிரதிநிதி திருமலை மாவட்டத்தில் இருந்து செல்வதைத் தடுக்க இயலாது. தமிழ்ப் பகுதிகளில் ஒரு சில எட்டப்பர் கூட்டம் இதற்கு உடந்தையாக உள்ளது. சிங்களக் குடியேற்றத்தை எதிர்க்கும் ஒரேயொரு இயக்கம் தமிழர்கூட்டணி ஆகும். தமிழ் மக்கள் தமிழர் கூட்டணியின் பின் ஒருங்கு திரண்டு சிங்கள ஆக்கிரமிப்பை முறியடிக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் மாத்திரமின்றி வவுனியா மன்னார் போன்ற மாவட்டங்களும் சிங்களக் குடியேற்றத்திற்கு இலக்காகியுள்ளன. ஏன் யாழ்ப்பாணத்திற் கூட சிங்களக் குடியேற்றம். நாம் இனியும் சும்மாயிருந்தால் இன்னும் பத்து வருடங்களில் கிழக்கிலங்கை சிங்களமயமாகிவிடும். இதைத் தடுக்க நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். இதற்கு ஒரேயொரு வழி வெளிமாகாணங்களில் உள்ள தமிழர்கள் கிழக்கில் குடியேறுவதேயாகும். கிழக்கு மாகாணத்துடன் நமது உறவைப் பலப்படுத்த தமிழ் இளைஞர்கள் முன்வர வேண்டும் கிழக்கு மாகாணத்தில் நாம் திருமணம் செய்தால் அங்கு குடியேற வாய்ப்பு ஏற்படும்!

சிங்கள ஆக்கிரமிப்பைப் பற்றி பல நூல்கள் கட்டுரைகள் வெளிவரவேண்டும். சரித்திர ஆதாரங்களுடன் புள்ளி விபரங்களுடன் கூடிய பல நூல்கள், கட்டுரைகள் வெளிவரவேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு சிங்கள ஆக்கிரமிப்பை விளங்கப்படுத்த முடியும். சிங்கள மக்களை விடக் காணிப் பஞ்சம் தமிழ் மக்களிடையே தலை தூக்கியுள்ளது. விவசாயம் செய்யக் காணியில்லாமல் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் தவிக்கும்போது சிங்களவரை தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றும் இச்சதித்திட்டங்களை நாம் முறியடிக்க வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து ஆக்கிரமிப்பாளரே வெளியேறுங்கள் என்று ஒரே குரலில் குரல் எழுப்ப வேண்டும்.

### கல்வியமைச்சரின் 'முற்போக்கு'

கல்வியமைச்சர் வத்தேகமையிற் பாடசாலைத் திறப்பு விழா ஒன்றில் பேசும்போது கொழும்பு ஆனந்தாக் கல்லூரியை அபிவிருத்தி செய்ய 145 இலட்ச ரூபா செலவழிக்கப்படுவதாகக் கூறியுள்ளார் (டெயிலி நியூஸ் மே 23). சிங்களப் பாடசாலை ஒன்றை அபிவிருத்தி செய்யவே 145 இலட்ச ரூபா செலவழிக்கும் அரசாங்கம் இலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் அனைத்திற்குமே சேர்த்தாலும் இவ்வளவு தொகையைச் செலவழிக்கவில்லை.

அதே கூட்டத்தில் மேலும் பேசிய அமைச்சர் இன்னொரு உண்மையையும் வெளியிட்டுள்ளார். கல்வியமைச்சு நிதியொதுக்கும்போது 80 வீதம் சிங்களப் பாடசாலைகளுக்கும் 12 வீதம் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் 8 வீதம் முஸ்லிம் பாடசாலைகளுக்கும் ஒதுக்குவதாகக் கூறியுள்ளார்.

சனத்தொகை விதாசாரப்படி நிதியொதுக்கப்படுவதாகக் கூறும் அமைச்சர் சனத்தொகை விதப்படியும் அதைச் செய்யாது சிங்களவருக்குக் கூடிய தொகையும் தமிழருக்குக் குறைந்த தொகையும் ஒதுக்கியுள்ளார். இலங்கையிற் தமிழரின் தொகை 22 வீதமாயும் சிங்களவரின் தொகை 70 வீதமாயும் இருக்க சிங்களவருக்கு 80 வீதமும் தமிழருக்கு 12 வீதமும் கொடுக்கப்படுகிறது. இதுதான் "முற்போக்கு"

கல்வியமைச்சு நியமனங்களில் 12 வீதம் கொடுக்கப்பட்டாலும் வேறு சில துறைகளில் இந்த 12 வீதமாவது கொடுக்கப்படுவதில்லை. உதாரணமாகப் பாதுகாப்புச் சேவைகளில் இந்தப் 12 வீதமாவது தமிழருக்கு நியமனங்கள் வழங்கப்படுவதில்லை. சனத்தொகை வீதப்படி நியமனங்கள் கொடுப்போர் சனத்தொகை வீதப்படி நாட்டைப் பிரித்துக் கொடுத்தால் என்ன? பிரிவினைக்கு வழிவகுப்பவர்கள் அரசாங்கமே தவிர வேறொருவருமல்ல. தேசிய ஒற்றுமைக் கருத்தரங்கு நடாத்துவோர் இது பற்றிச் சிந்தித்தால் நன்றாயிருக்கும்.

### துரோகிகளிடையே குத்துவெட்டு

சமீபத்தில் அராலியிற் பேசிய தியாகராசா பிரதமரால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாளர் தானே என்றும் இதுகூட சிலருக்கு விளங்காதது வியப்பாயுள்ளதாகக்'' கூறி அமைச்சர் குமாரசூரியரை மறைமுகமாக சாடியிருக்கிறார்.

### துரோகியே இதற்கு உன் பதிலென்ன்?

மட்டக்களப்பு பிராந்திய நெற்சந்தைப்படுத்தும்சபையினால் வழங்கப்பட்டுவரும் நெற்கொண்டு செல்வதற்கான பெர்மிட் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுகின்றன. (வீரகேசரி 25 மே) ராஜன் செல்வநாயகமே இதுதானா உனது சிங்கள அரசு தமிழ் மக்களுக்குச் செய்யும் சேவை.

### அரசுப் பணத்தில் பௌத்த மதமாற்ற முயற்சி!

சமீபத்தில் கொழும்பிற் பேசிய அமைச்சர் மைத்திரிபாலா சேனநாயக்கா தமிழ் பிள்ளைகளை பிக்குகளாக மாற்றி அவர்கள் மூலம் வடக்குக் கிழக்கில் பௌத்த சமயத்தைப் பரப்புமாறு அகில இலங்கை பௌத்த காங்கிரசைக் கேட்டுள்ளார். இதற்கு அரசின் முழு ஒத்துழைப்பையும் பெறலாம் என அவர் உறுதியளித்துள்ளார். -5-ம்பக்கம்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத் தமிழன் சிவகுமாரன் சிலை திறப்பு விழா!

# தங்கத் தமிழினம் உரும்பிராயில் எழுச்சி!

# ஆயுதம் தாங்கிய சிங்கள பொலீசார் ரோந்து!

ஆனிமாதம் ஐந்தாம் திகதி, சிங்கத் தமிழன் சிவகுமாரன் மறைந்து ஓராண்டு பூர்த்தியான தினத்தன்று, அந்த வீரத்தமிழனை ஈன்றளித்த வீரபூமியாம் உரும்பிராயில் அவனின் கம்பீரமான சிலையொன்று உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் சிறைமீண்ட இளைஞன் திரு. தம்பித்துரை முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

சிலை திறப்பு வைபவத்திற்கு முதல் பல்லாயிரக்கணக்கானோர் சிவகுமாரனின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்திவிட்டு அணிவகுத்தபடி சிலை அமைந்திருக்குமிடத்தை நோக்கிவந்தனர்.

கவிஞர் காசி ஆனந்தன் தனது உணர்ச்சி மிகுந்த தலைமையுரையில், கூறியதாவது:-

"ஓர் இனம் விடுதலைக்காகப் போராடும்போது இரண்டு வழிகளில் செயல்படுவதுண்டு. ஒன்று அஹிம்சை வழியிற் போராடுவது—மற்றது ஆயுதமெடுத்து போராடுவது. சிவகுமாரன் ஆயுதமெடுத்து அடிமைத்தனத்துக்கு எதிராகப்போராடத் துணிந்தவர். தனது வாழ்வையே தமிழினத்துக்காக அர்ப்பணித்தவர். ஆளும் இனத்தின் அடக்கு முறைகள் அதிகரிக்குமானல் சிவகுமாரன்கள் வெடித்துக்கிளம்புவதை யாராலும் தவிர்க்கமுடியாது. சிவகுமாரன் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்!"

அடுத்து சிலையைப் பலத்த கரகோஷத்தின் மத்தியில் திறந்து வைத்துப் பேசிய சிறைமீண்ட இளைஞனும், சிவகுமாரனின் நெருங்கிய நண்பனுமான திரு. த. முத்துக்குமாரசுவாமி, 'நான் சிறையிலிருந்தபோது நண்பன் சிவகுமாரனைப்பொலிஸ் தேடித்திரிந்தது — அவரின் தலைக்கு விலைபேசியது — ஆனல் தன்மானத் தமிழன் ஒருவனும் காட்டிக்கொடுக்கவில்லை – அப்போதெல்லாம் 'பொலிஸ் ஏன் இப்படித் தனி ஒருவனுக்கு அஞ்சியஞ்சிச் சாகிறது!' என்று எண்ணி வியந்தேன்—ஆனல் இன்று சிவகுமாரன் சிலையான பிறகு கூட, இந்த வெறும் சிலைக்கே பயந்து இங்கே அலைந்துதிரியும் ஆயிரக்கணக்கான பொலிசாரைக்காணும் போது சிவகுமாரன் ஒரு உண்மைவீரன் என்பது புரிகிறது" என்ருர்.

கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி பேசும்பொழுது, "அடக்குமுறை தொடர்ந்து நீடிக்குமாயின் வீரன் சிவகுமாரன் போல் ஆயிரமாயிரம் வாலிபர்கள் தோன்றுவார்கள்" என்று குறிப்பிட்டார்—

நாவலர் அ. அமிர்தலிங்கம் பேசும்பொழுது, "கட்டுப்பாடான, ஒற்றுமை மிகுந்த விடுதலை இயக்கத்தாலேயே தமிழினம் விடுதலை காணமுடியும்" எனவும் "சிவகுமாரனும் இதையே பலமுறை வலியுறுத்தினன்" எனவும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.

மற்றும் அ. வரதராசன், சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம், தந்தை செல்வா ஆகியோரும் உரையாற்றினர்.

சட்டத்தரணி திரு. யோகேஸ்வரன் நன்றி கூறினுர்.

## நெடுங்கேணியில் சிவகுமார் பெயரில் அன்னதானம்

நெடுங்கேணி தமிழ் இளைஞர் பேரவையினர் தமிழுக்காக உயிர்கொடுத்த தன்மானத் தமிழ் மகன் சிவகுமாரனின் நினைவு நாளான 5-6-75 அன்று நெடுங்கேணி கடை வீதியில் இருக்கும் நாகதம்பிரான் கோவிலிலும் வேலாயுதசுவாமி கோவிலிலும் விசேட பூசைகள் நடாத்தினர் நாகதம்பிரான் கோவிலில் அன்னதானமும் வழங்கினர். நூற்றுக்கணக்கான மக்கள் அன்னதானத்தில் பங்குகொண்டு சிறப்பித்தனர். விழாவுக்கு நெடுங்கேணி வர்த்தகர்கள் இலவச ஒலிபெருக்கி அமர்த்திக் கொடுத்தனர்.

## அரசுப்பணத்தில்...

—4-ம் பக்கத் தொடர்

இந்த நாட்டை ஒரு சிங்கள பௌத்த நாடாக்குவதே சிங்கள அரசியற் கட்சிகளின் நோக்கம். அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முதலிடம். இதில் ஐ. தே. கட்சிக்கும் சு. கட்சிக்கும் வேறுபாடில்லை. சிங்கள அரசியற்கட்சிகள் தேசிய ஒற்றுமை பேசுவது தமிழ் மக்களை ஏமாற்றும் முயற்சியே தவிர வேறொன்றுமல்ல.

பௌத்த மத வளர்ச்சிக்கு அரசு உதவியளிக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்த பாடசாலைகள் நிறுவுதல் இவையெல்லாம் நமது அடிவருடிகளின் கண்களை இனியாவது திறக்குமா?

—தமிழ் அன்பன்.

## உடுப்பிட்டி சிவா தலைமையில்

### கொழும்பில் கலைஞர் பிறந்த நாள் விழா!

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 52வது பிறந்த நாள் விழா பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 15-6-75 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது. இவ்விழாவுக்கு தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான உடுப்பிட்டி முன்னுள் பா. உ. திரு சிவசிதம்பரம் தலைமைவகிக்கிருர். விழாவில் சட்ட மாணவர் திரு. கனகமனோகரன், திரு. க. நவசோதி பீ. ஏ. ஆகியோர் உட்பட பலர் பேசுகிருர்கள். இவ்விழாவின் இறுதியில் கலைஞரின் 'பராசக்தி' நாடகமும் மேடையேறுகிறது. இந்நாடகத்தை மேடைத்தொகுப்பாகஜீவா- நாவுக்கரசன் அமைத்திருக்கிருர்.

## தமிழ் இளைஞர் பேரவை புனரமைப்பு!

தமிழ் இளைஞர்பேரவை கட்டுக் கோப்புள்ள ஒரு இயக்கமாகப்புனரமைக்கப்படவிருக்கிறது. இந்தப் புனரமைப்பு வேலைகளை கவனிக்கும் குழுவுக்குதலைவராக கவிஞர் காசிஆனந்தனும், அமைப்புச் செயலாளராக மாவை சேனுதிராசாவும் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர். புனரமைப்பு வேலைகளை இவர்களிருவரும் சுறுசுறுப்புடன் கவனித்து வருகின்றனர்.

## காசி ஆனந்தனுக்கு அமிர்தகழியில் வரவேற்பு

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கு அவரது பிறந்த ஊரான அமிர்தகழியில் 14—6—75 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பொது வரவேற்பு அளிக்கப்படுகிறது. மட்டிக்களி கதிரொளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இவ்வரவேற்பு விழாவில் நாவலர் அமிர்தலிங்கம் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஈழவேந்தன் அ. தங்கத்துரை பா. உ. ஆகியோர் உட்பட பலர் பேசுவர்.

## இலண்டனில் ஆர்ப்பாட்டம்....

1-ம் பக்கத் தொடர்

கின்ற நாம், இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்கு வைகாசி17ந் தேதி வரும் சிங்கள (ஸ்ரீலங்கா) கோஷ்டி பிரதிபலிக்கின்ற தமிழர் புறக்கணிப்பை உலகின் கவனத்துக்கு கொண்டுவருதல் வேண்டும். மொழி, நிலம், கல்வி, தொழில் ஆகிய அடிப்படைத்தேவைகளை முழுவதுமாக இழந்துள்ள நாம், விளையாட்டுத் துறையில் கூட முற்றுகப் புறக்கணிக்கப்படுகின்ருேம் என்பது வெளிப்படை.

"ஸ்ரீலங்கா கோஷ்டியில் இடம்பெறும் விளையாட்டு வீரர்களிலும், திறமையும் தகுதியும் மிகுந்தவர்கள் தமிழர்களில் இருக்க தகுதி குறைந்தவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பது, இங்கிலாந்தில் இடம்பெறும் போட்டிகளில் இலங்கை வீரர்கள் வெற்றிபெற்று சாதனைகளை நிலைநாட்டவேண்டுமென்ற குறிக்கோளை இல்லாத அரசின் தன்மைகளையும், மேல் நாடுகளுக்கு இலவசமாகப் பயணம் செய்ய அரசாங்கம் ஆக்கித்தரும் சந்தர்ப்பங்களை சிங்களவரே அனுபவிக்கவேண்டுமென்ற இனப் பாரபட்ச மனப்பான்மைகளையும், மேலைநாடுகளில் விளையாட்டுத்துறையில் பெறக்கூடிய புதிய அனுபவங்கள் விளையாட்டு நுணுக்கங்கள்தொடர்புகள் அனைத்தையும் சிங்களவரே அனுபவிக்கவேண்டுமென்ற ஓரவஞ்சனைகளையும் வலிமையாக எதிர்ப்பதற்காக இப் போட்டிகளை முற்ருகப் பகிஷ்கரிப்போம்! இவைகளின் மூலமாக ஈழம் பிரிவதை வலியுறுத்துவோம்.

"இலங்கையிலிருந்துஇங்கு வரும் விளையாட்டுக்குழுவில் இடம்பெற்றுள்ள சிங்கள கலப்புத்தமிழர் திரு. சண்முகத்தைவிட எந்த அசல் தமிழனும் இடம்பெறவில்லை. சிங்களப்பெண் ஒருத்தியை மணம் செய்துள்ளார் என்பதற்காகவும், சிங்கள விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர் என்பதற்காகவும் இடமளிக்கப்பட்டுள்ள சண்முகத்தைக் கொண்டு தமிழர்களுக்கு இடமளிக்கப் பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்வதோ அன்றேல் பிரசாரம் செய்வதோ உண்மைகளை ஒருபோதும் மறைத்துவிடாது.

"விளையாட்டுத்துறையின் நோக்கங்களை ஒருதரம் நினைவுபடுத்துவது, இலங்கை நிலையை சரியானபடி பிரதிபலித்துக்காட்டும். உலக நாடுகளை நாளாந்தம் திகிலடையச்செய்யும் போர்க் குமுறல்களுக்கிடையே சமாதானத்தையும் நட்பையும் கட்டிக்காப்பதற்காக நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடாத்தப்படுகின்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளும், ஐரோப்பிய விளையாட்டுப்போட்டிகளும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப்போட்டிகளும் நாடுகளுக்கிடையே உள்ள கசப்பு, வெறுப்பு. காழ்ப்பு, உணர்ச்சிகளை தணித்து வருவது மறுக்கமுடியாத உண்மை. விளையாட்டுத் துறையின் தலையாய நோக்கங்களும் இவைகளே!

"இப்புனித நோக்கங்களை முன்வைத்தே தென்னுபிரிக்காவில் இன — நிற வேறுபாட்டுக் கொள்கைகளை உலகநாடுகள் துணிவுடன் கண்டிக்க முன்வந்து, தென்னுபிரிக்கா நாடு உலகநாடுகளுடன் விளையாட்டுப்போட்டிகளில் பங்குபெறுவதை முற்ருக நிராகரித்துவிட்டன. இதனுல் தென்னுபிரிக்க நாட்டில் அடக்குமுறைகளை உலக மக்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டது. இம்முடிவானது தென்னுபிரிக்க அரசு அரசியல், சமூக பொருளாதாரக் கொள்கைகளில் உள்ள பாரபட்சங்களைக் களைய வேண்டியதை வலியுறுத்தியது.

"எனவே ஆனித்திங்கள் 7ம் நாள் மான்செஸ்டர் Old Traffordல் உள்ள விளையாட்டுத் திடலில் மேற்கிந்திய கிரிக்கட் குழுவுடனும் 11ம் நாள் லண்டன் Oval திடலில் ஆஸ்திரேலியக் குழுவுடனும் 14ம் நாள் நொட்டிங்காம் Trent Bridge ல் பாகிஸ்தான் குழுவுடனும் நடக்கவிருக்கும் போட்டிகளை முற்ருக நாம் புறக்கணிப்போம். புறக்கணிப்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவோம். இலங்கையில் நடக்கும் கொடுமைகளை உலக நாடுகளும் எதிர்க்கும்படி செய்வோம்.

"சினத்தைக் கிளறும் சிங்கள கிரிக்கட் ஆட்டம்வேண்டாம்! தமிழர்களே! ஒத்துழையுங்கள். ஈழவிடுதலை முன்னணியும் தகுந்த முறையில் தனது எதிர்ப்பைத் [illegible]

## கதவடைப்பு கண்களைத் திறந்தது!

### தலைநகரில் தமிழ் கத்தோலிக்கக் கழகம் உதயமானது!

அண்மையில் முகத்துவாரத்தில் உள்ள கத்தோலிக்க ஆலயம் ஒன்று வழிபாட்டுக்குக் கதவடைக்கப்பட்டதும் பின்னர் திறக்கப்பட்டதும் நேயர்கள் அறிந்ததே.

இந்தக் கதவடைப்பின் பயனுக தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுவரை இழக்கப்பட்ட பல உரிமைகளைத் தட்டிக் கேட்கும் நோக்குடனே இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

முகத்துவார ஆலயத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு மறுக்கப்பட்ட வழிபாட்டைத் திரும்பப் பெற்றுக் கொடுக்கவும் கோட்டை பூந்தோட்ட வீதியில் உள்ள பிரமாண்டமான கத்தோலிக்க ஸ்தாபன கட்டடத்தில் தமிழ்மொழிக்கு இடம் வழங்கவும் குருமடம் ஒன்றில் மூடப்பட்டுள்ள தமிழ்ப் பிரிவை மீண்டும் திறக்கவும் இக்கழகம் கருதினுல் ஆண்டகைக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

கத்தோலிக்க தமிழ்பேசும் மக்களிடை எந்த விதத்தில் எழும் பிரச்சினைகளுக்கும் இக்கழகம் உரிமைப்போர் நடாத்த தயாராய் உள்ளதாக அறிவிக்கிறது.

## பெருஞ்சாந்தி பெருவிழா!

சுருவில் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனுர்கோவில் பெருஞ்சாந்திப் பெருவிழா (மகா கும்பாபிஷேகம்) 19.6.75 வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமைப்பாடு மாநாட்டில் எருமைத்தனமான பேச்சு!

## ● சுன்னுகம், ● கந்தரோடை போன்ற ஊர்கள்

## சிங்களப் பகுதிகளாம்

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக இழுபறிப்பட்டுவந்து - பத்திரிகைகள் மூலம் பெரிதாக விளம்பரம் செய்யப்பட்டுவந்த பழைய 12 அம்சத் திட்டத்தையும் இலங்கரத்திஞவிடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு - இறுதியாக 'முற்போக்கு' எழுத்தாளர் சங்கத்தினர் கொழும்பில்மெத்த வில்லங்கப்பட்டு ஒப்பேற்றிய ஒருமைப்பாடு மாநாடு படுதோல்வியில் முடிவடைந்தது.

இந்த மாநாட்டில் சிங்கள எழுத்தாளர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களும் மாநாட்டில் நடைபெற்ற சம்பவங்களும் "முற்போக்கு அணியை" சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் தமிழ் எழுத்தாளர்கள் பலருக்கே பலத்த அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்துள்ளதாம்.

தமிழ் இனத்தின் உரிமைகளை அரசியல் சாசனத்தில் பொறிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் ஒரு சாதாரண தீர்மானம்கூட இங்கு நிறைவேற்றப்படாதது கண்டு பலரும் ஏமாற்றமடைந்தனர்!

முதலாளிகளை ஒழித்துக் கட்டப்போவதாக மேடைகளில் கூறிவரும் இந்த முற்போக்குச் சூரர்கள் தங்கள் ஒருமைப்பாடு மாநாட்டுக்கு அதே முதலாளிகளிடமே 'பிட்சா பாத்திரம்' ஏந்தித் திரிந்ததும் முதலாளிகளின் காலில் விழுந்து பெருந்தொகைப் பணத்தைச் சம்பாதித்துக்கொண்டதும் நாட்டு மக்கள் அறிந்ததே.

12 அம்சத் திட்டம் என்று ஒன்றை முன்வைத்து-பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த 12 அம்சத் திட்டம் தயாரிக்கப்பட்டதாக எடுத்துக்கூறி-மாநாட்டுக்கு பெருந்தொகைப் பணம் சேர்த்துக் கொண்டவர்கள் — இறுதியில் 12 அம்சத்திட்டத்தை 'அம்போ' என்று கைவிட்டு, அதை வெட்டிச்சிதைத்து உருமாற்றியதையும் பிரதமரும் ஜனதிபதியும் மாநாட்டில் கலந்து கொள்ளமுடியாது என்று மறுத்துவிட்டதையும் சுதந்திரன் அம்பலப்படுத்தியிருந்ததை வாசகர்கள் அறிவார்கள்.

### காலில் விழுந்தனர்!

மாநாட்டுக்கு பிரதமர் வருவது கடைசிவரை என்னவோ சந்தேகமாகவேயிருந்ததாம். 12 அம்சத் திட்டம் வெட்டிச் சிதைத்து உருமாற்றப் பட்டபின்னர்— அம்மையார் காலில் விழுந்து எப்படியும் மாநாட்டுக்கு வரவேண்டுமென்றும் இல்லாவிடின் தங்கள் மானம் கப்பலேறிவிடுமென்றும் மாநாட்டு எடுபிடிகள் பாத பூசை செய்து பிரார்த்தித்தார்களாம்.

எனினும் மாநாட்டுக்கு பிற்பகல் 2 மணிக்கு வருகை தருவதாக இருந்த பிரதமர் குறித்த நேரத்துக்கு வராதது வால்பிடி எழுத்தாளர்களுக்கு வயிற்றைக் கலக்கிவிட்டதாம். சுதந்திரன் பத்திரிகையும் கையுமாக அம்மாவிடம் ஓடிச்சென்று அதைக் காட்டி, இதிலேயே போட்டுத் தொலைத்துவிட்டார்கள் நீங்கள் வரமாட்டீர்கள் என்று; நீங்கள் வராமல்விட்டால் நாங்கள் பின்னர் தலைகாட்டவே முடியாமற் போய்விடுமென்று கெஞ்சிமன்ருடிய பின்னரே பிற்பகல் 5 மணிக்கு அம்மையார் பிரத்தியட்சமாகி மாநாட்டு மண்டபத்தில் தரிசனம் கொடுத்தாராம்!

அம்மையாருக்குமாநாட்டு மண்டபத்தில் 'நவக்கிரக' வரவேற்பு கிடைத்ததாகவும், முற்போக்குவாதிகளும் முதலாளித்துவ விரோதிகளும் முன்னின்று நடத்திய

### மாநாட்டில் எழுந்த தில்லுமுல்லு!

இம்மாநாட்டில் "கறுத்தைக் காசு முதலைகளுக்கே" முக்கிய இடம் தரப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்த மாநாட்டின்போது நடைபெற்ற சிலகுறிப்பிடத்தக்க சம்பவங்கள் வருமாறு:-

● சிதைத்து உருமாற்றி புதிதாக தயாரிக்கப்பட்ட 12 அம்சத் திட்ட விபரம் எது என்பது பத்திரிகைகள் மூலம் பகிரங்கமாக மக்கள் முன் வைக்கப்படவில்லை!

● இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்கு தலைமைதாங்க இருந்த பிரபல எழுத்தாளர் அகஸ்தியர் அதற்கு மறுத்துவிட்டார்!

● லீல் குணசேகரா எனும் சிங்கள எழுத்தாளர் தமது பேச்சின்போது, கந்தரோடை, சுன்னுகம் கொடிகாமம் போன்ற பகுதிகள் அனைத்தும் சிங்களப் பகுதிகள் என்று நாத்து[illegible] குறிப்பிட்டார்.

● லீல் குணசேகராவின் 'இந்த அபத்தமான ஆணவப் பேச்சு மாநாட்டில் மறுக்கப்படவில்லை. மறுத்துப்பேச முன்வந்த ஒரு எழுத்தாளருக்கு அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது!

● சிங்களப் பேச்சுக்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை! சிங்களம் தெரியாதவர்கள் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த மாதிரி அசடு வழிய உட்கார்ந்திருந்தனர்.

● நடைபெற்ற கவியரங்கில் இளங்கவிஞர் ஒருவர் போலிச் சோசலிசமும், போலி முற்போக்கும் பேசும் அரசாங்க அடிவருடிகளுக்கு அதே மேடையிலே வைத்து தன்னுடைய கவிதைகளால் சுடச்சுடச் சாட்டையடி கொடுத்தார்.

● திடீர் அமைச்சர் குமாரசூரியர் பிரதமரின் பேச்சை மொழிபெயர்க்க முன்வந்தபோது மிகுந்த பக்திசிரத்தையுடன், தம்முடைய காலில் அணிந்திருந்த செருப்பையும் கழற்றிவிட்டு வெறுங்காலுடன் அந்தப் "புனிதமான" பணியைச் செய்து தமது அடிமை நிலையை அம்மையார் முன் உறுதிசெய்தார்!

● மார்ட்டின் விக்கிரமசிங்கா எனும் சிங்கள எழுத்தாளரை மாநாட்டில் அழைத்து கௌரவித்தவர்கள்—இன்று நோயால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருக்கும் பழம்பெரும் தமிழ் எழுத்தாளர் இரசிகமணி கனக செந்திநாதன் பற்றி ஒரு மூச்சுக்கூட விட முன்வரவில்லை!

இவ்வாறுபல தில்லுமுல்லுகளுக்கு மத்தியில் நடந்து முடிந்த எருமைப்பாடு மாநாடு, தேசியமுமின்றி ஒருமைப்பாடுமின்றி சிலரது வயிற்றை நிரப்புவதற்கு மட்டுமே பயன்பட்டதாக இலக்கிய [illegible] கிருர்கள்!

## கவிஞர் நீலாவணன் அரங்கில் தமிழ் நெறிக்கழகம் நடத்திய முத்தமிழ் காப்பிய விழா!

கல்முனைக் கடற்கரைக் கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த குழுர்த்தி—விசேட கும்பாபிசேக வைபவத்தை முன்னிட்டு, 25—5—1975 ஞாயிற்றுக் கிழமையன்று கவிஞர் நீலாவணன் அரங்கில் தமிழ் நெறிக் கழகம் நடாத்திய முத்தமிழ் காப்பிய விழா சிறப்பு விழாவாக அமைந்திருந்தது.

இவ்விழாவில் இயல் இசை நாடகம் நிகழ்ச்சிகளோடு ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

மேற்படி விழா செல்வி வாசுகி தேவி விஜயகுமாரத்திக்குப் பதிலாக செல்வி சிவமணி தம்பிராசா அவர்களின் வணக்கப்பாவுடனும் திரு. எஸ். எஸ். ஜோசேப் அவர்களின் வரவேற்புரையுடனும் திரு. ஏகாம்பரம் அவர்கள் தலைமையில் தொடங்கியது.

இவ்விழாவின் இயல் அரங்க நிகழ்ச்சியில் "அவளும் ஒரு தமிழச்சி" என்னும் தலைப்பில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் "அற நெறி பிழைத்தோர்க்கு" என்னும தலைப்பில் வித்துவான் கே. ஞானரெத்தினம் அவர்களும் "கண்ணகியின் [illegible]வம்" என்னும் தலைப்பில் கவிஞர் முத்தழகு அவர்களும, "ஆலய வழிபாடு" என்னும் தலைப்பில் செல்வி தவமணி தம்பிராசா அவர்களும் "சிவப்புச் சாயம்" என்னும் தலைப்பில் செல்வன் இரா பன்னீர்செல்வம் அவர்களும் "ஆத்மீகமும் அன்னையின் அருளும்" என்னும் தலைப்பில் சுவாமி நடராசானந்தா அவர்களும் உரையாற்றினர்.

"எந்த வழி நம் சொந்த வழி" என்னும் தலைப்பில் நடந்த கவியரங்க நிகழ்ச்சியில் நிலாவணைச் சுந்தரனும் நீலாவணைத் தேவராஜ் அவர்களும் கலந்து சிறப்புக் கவிதை பாடினர். இசையரங்க நிகழ்ச்சியில் ஈழத்தின் சிறப்புவாய்ந்த இசைக் குழுவென விளங்கும் கதிரவனுதவனின் மெல்லிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றன.

மேற்படி விழாவில் அடுத்து நடைபெற்றது நாடக அரங்கம். கவிஞர் மு சடாட்சரன் அவர்களின் "கொடுமையின் குரல்" என்னும் நாடகம் இடம் பெற்றது. நாடகத்தை அடுத்து திரு. த. கோபாலரெத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

## கிளிநொச்சி தன்மானத் தமிழ் வர்த்தகர்கள்

கிளிநொச்சித் தொகுதி மக்கள் குடியரசு தினத்தன்று பூரண கடையடைப்பும் பகிஷ்கரிப்பும் செய்து குடியரசு அமைப்பில் தமக்குள்ள அதிருப்தியை வெளியிட்டுக்கொண்டது தெரிந்ததே. 'பரந்தன் எமது கையில்' என வீதிகளில் எழுதித் திரிந்த குமாரசூரியர் கும்பல் இது கண்டு மனம் குமுறியது, சங்க உத்தியோகத்தர்களை கடைகடையாய் அனுப்பி பூட்ட வேண்டாமெனக் கேட்டும் தம் எண்ணம் தோல்வியடைந்தது கண்ட கரைச்சி வடக்கினதும் தெற்கினதும் ப. நோ. கூ. சங்க தலைவர்களான சிறீலங்கா குஞ்சுகள் கடைபூட்டியதற்கு மன்னிப்பு கேட்டும் இனிப்பூட்டமாட்டோம் என உறுதிமொழி கூறியும் கடிதம் எழுதித்தந்தால் மட்டுமே தனியார் கடைகளுக்கு மா விநியோகிப்போம் என்றனர்.

ஆனல் தன்மானத் தமிழர்களான வர்த்தகர்கள் எவருமே மன்னிப்புக் கேட்க முன்வரவில்லை. மா விற்க முடியாவிடினும் போகட்டும் மானமே பெரிதெனக் கூறிவிட்டனர். கிளிநொச்சி மக்கள் மா தட்டுப்பாட்டால் தவிக்கின்றனர். குமாரசூரியரதும் அவரது வால்களினதும் திமிர்த்தனமான இந்தச் சர்வாதிகார நடவடிக்கை மக்களிடம் அவர்களுக்கு மேலும் வெறுப்பையும அதிருப்தியையும் ஏற்படுத்திஉள்ளது. கிளிநொச்சி பா.உ. வும் இது குறித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிருர்.

மில்க் வைற் சோப் ஸ்தாபனத்தினரின் ஆதரவில்
கமலாலயம் அளிக்கும்

"அசட்டு மாப்பிள்ளை"

வரணியூரான் எழுதும் நகைச்சுவை நாடக நிகழ்ச்சியை 15 - 6 - 75 தொடக்கம் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 3-30 மணிக்கு வானொலியில் கேட்டு மகிழுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு! சிங்கள அரசே இதை உணர்ந்து திருந்து!"

சிங்கள பௌத்த ஏகாதிபத்தியக் குடியரசை எதிர்த்து மே 22-ம் நாள் ஈழத்தமிழர்கள் இங்கு சட்டமறுப்புப் போராட்டம் நடத்திய அதே நேரம் — அன்றைய தினம் தமிழகத்தின் தலைநகரான சென்னையிலும் இலங்கை அரசின் தமிழின ஒழிப்புக்கொள்கையை கண்டித்தும், தமிழர்களின் உரிமைகளை வழங்கும்படி சிங்கள அரசிடம் இடித்துரைத்தும் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தை உலகத்தமிழர் பாதுகாப்பு பேரவை நடத்தியது.

இலங்கை சிங்கள அரசின் இனவெறிப் போக்கைக் கண்டித்து, மண்ணடி மூர் தெருவில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

உலகத் தமிழர் பாதுகாப்புப் பேரவையின் தலைவி திருமதி அமுதாரராகவன் இக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கினர். தமிழ் மன்னன் வரவேற்புரையாற்றினர்.

ஆசிர் நல்லதம்பி, சையத், தமிழ்மன்னன், திருமதி சங்

எங்கள் பொறுமைக்கும் எல்லை உண்டு.

## முத்துராமலிங்கம்

தமிழர் பாதுகாப்புப் பேரவைத் தலைவர் முத்துராமலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழைப் பாதுகாக்க, தமிழினத்தைப் பாதுகாக்க, தமிழகத்தைப் பாதுகாக்க பேரறிஞர் அண்ணு அவர்கள் பாடுபட்டது போலவே முதல்வர் கலைஞர் அவர்

நியமிக்கப்படுகிருர்கள்.

அதே நேரத்தில் இலங்கைக்கு ஒரு தமிழரைத் தூதுவராக நியமியுங்கள் என்ருல், இந்திய அரசு அதை ஏற்கவில்லை.

பங்களாதேஷ் பிரச்சினையில் அக்கறை காட்டிய மத்திய அரசு இலங்கை தமிழர் பிரச்சினையிலே இத்தனை அலட்சியமாக இருப்பது சிறிதும் முறையற்றதாகும்.

அதைக் கண்டிக்கும் வகையில் இந்திய அரசு இலங்கை அரசோடு பேசக் கேட்டுக் கொள்கிருேம். தமிழர்கள் அங்கே நசுக்கப்படும்போது, இலங்கை குடியரசான இந்த நாளை உலகிலுள்ள ஏழு கோடித் தமிழர்களும் துக்க நாளாக அனுஷ்டிக்க வேண்டுகிருேம்.

2. இலங்கைத் தமிழ் இளைஞர் தலைவர் கவிஞர் காசி ஆனந்தனையும் மற்றும் பல தலைவர்களையும் கைது செய்திருக்கிற சிங்கள அரசு அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். இதற்கு இந்திய அரசு தன் செல்வாக்கை உபயோகிக்க வேண்டும்.

3. இலங்கை தோட்டத் தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்பட்டு — வேலை

படியும், ஈழத் தமிழர்கள் விடுக்கும் இந்தக் கோரிக்கையை ஐ. நா. வுக்கு எடுத்துச் சொல்ல இந்திய அரசு மற்றும் எல்லா குடியரசு நாடுகளையும் கேட்டுக் கொள்கிருேம்.

5. பர்மா தமிழர்கள் நாடு கடத்தப்பட்டு, அவர்கள் சொத்து சுகத்தை அங்கேயே விட்டு வந்து பதினேராண்டு ஆகிறது. அவர்களுக்கு சொத்து நஷ்டஈடு பெற்றுத் தர இந்திய அரசு உடனே ஆவன செய்ய வேண்டும்.

6. கம்யூனிஸ்ட் நாடாகிவிட்ட தென்வியட்நாமில் பத்தாயிரம் தமிழர்கள் இருக்கிருர்கள். தென்வியட்நாம் புரட்சி சர்க்காருடன் பேசி, அங்குள்ள தமிழர்களுக்கு ஊறு நேராமலிருக்க ஆவன செய்யுமாறு இந்திய

# சென்னையில் நடைபெற்ற இலங்கை குடியரசு எதிர்ப்புக் கூட்டத்தில் எழுச்சி முழக்கம்!

கரி நாராயணன் பேரவைச் செயலாளர் அரு. கோபாலன், மணவைத் தம்பி, முகவை எழில்மன்னன், சானகிராமன், முன்ளுள் துணை மேயர் சிலார்மியான், டாக்டர் சின்னராசு எம். எல். ஏ. ஆகியோர் பேசினர்கள்.

## அமுதா ராகவன்

உலகத் தமிழர் பாதுகாப்புப் பேரவைத் தலைவர் திருமதி அமுதாராகவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'அலைகடற்கப்பால் வாழ்வார் அன்பால் என் அகத்தில் வாழ்வார்.' என்று பாடினர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனர். நான் இலங்கையிலே பிறந்தவள் என்பது மட்டுமல்ல, இன ஒற்றுமை ஓங்கினலன்றித் தமிழினம் தலை நிமிராது என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பவள்.

மே 22—ம் நாள் இலங்கையின் குடியரசு நாள் ஆகும். ஆனல், இன்றைய நிலையில் அப்படிச் சொல்வதைவிட, இந்த நாள் இலங்கைத் தமிழர்களின் குடிகெடுத்த நாள் என்று கூடச் சொல்லலாம்.

ஆம்; அங்குள்ள தமிழ் மக்கள் வாழ வகையின்றி, தங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு, உணர்வுகள் நசுக்கப்பட்டு, எவ்விதப் பாதுகாப்பும் அற்ற நிலைமையிலே பரிதவித்துக் கொண்டிருக்கிருர்கள்.

தாய் தமிழகம், உடுக்கை இழந்தவன் கைபோல ஓடி வந்து உதவும் என்று எதிர் பார்த்திருக்கிருர்கள் அவர்கள். அந்த எதிர்பார்ப்பிலே அணுவளவும் தவறில்லை. ஆனல் நம்முடைய எழுச்சி, உணர்ச்சி, உத்வேகம் எந்த அளவு இருந்தாலும் மத்திய அரசைத் தாண்டி இந்திரா காந்தி அம்மையாரைத் தாண்டியல்லவா நாம் செயல்பட வேண்டியிருக்கிறது.

இந்த நாட்டிலுள்ள தமிழர்க்கே ஏற்ற பாதுகாப்பில்லை என்ற நிலைமையிருக்கிறது. பிரதமர் அவர்கள் இதுபோன்ற நிலைமைகள் நீங்கச் செய்திட வேண்டும்.

களும் அரும்பாடுபட்டு வருகிருர்.

'உதவாதினி ஒரு தாமதம் உடனே எழு தமிழா!' என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை இங்கே நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசி மூச்சுள்ளவரை தமிழ்த் துரோகிகளை எதிர்தது நிற்போம். முறியடிப்போம்; வெற்றி குவிப்போம்.

தாய்நாட்டிலிருக்கிற தமிழர்கள் ஒன்றுபட்டாலன்றி பிற நாட்டிலிருக்கிற தமிழர்களைப் பாதுகாப்பது கடினம். இதனை உணர்வோம்; எல்லோரும் ஒன்றுபடுவோம். இலங்கைத் தமிழர்க்குப் பாதுகாப்பளிக்க இயன்ற வகையில் செயல்படுவோம்.

## சுப்பு எம். எல். ஏ.

முன்ளுள் கம்யூனிஸ்ட்டும் சென்னைத் தொழிற்சங்கத் தலைவருமான கே. சுப்பு எம். எல். ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கைத் தமிழர்கள் கோரிக்கைகளிலே உள்ள நியாயத்தை நாம் எவ்வளவோ எடுத்துக்காட்டியும் கூட, இலங்கை அரசின் காதிலோ, இங்குள்ள இந்திய அரசின் காதிலோ விழுந்ததாகத் தெரியவில்லை.

இரண்டு மொழி இருக்கிற ஈழத்திலே ஒரு மொழிதான் ஆட்சி மொழி என்ருல் என்ன முறை! தமிழர்களே வாழும் பகுதியில் கூட சிங்களத்தின் ஆதிபத்தியம் என்பதை யாரால்தான் ஏற்க முடியும்?

எங்கள் மொழிக்கும் சம அந்தஸ்து வேண்டும் என்று அங்குள்ள தமிழர்கள் கேட்கிருர்கள் என்ருல் அதிலே என்ன தவறு?

அங்குள்ள தமிழ் மக்கள் அடக்கப்படுகிருர்கள், ஒடுக்கப்படுகிருர்கள் என்று எவ்வளவோ சொல்லியும் அங்குள்ள தமிழர்களுக்காக இங்குள்ள மத்திய அரசு கவலைப்படவில்லை.

பிரதமர் இந்திரா காந்தியின் உறவினரெல்லாம் அயல் நாட்டுத் தூதுவராக

உலகத் தமிழர் பாதுகாப்புப்பேரவையின் இணைச் செயலாளர் டாக்டர் எஸ். ஏ. சின்னராசு எம். எல். ஏ., கொண்டுவந்த பின்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தினரால் கைதட்டி வரவேற்கப்பட்டன.

தீர்மானங்கள் விவரம் வருமாறு!

1. இலங்கையில் உள்ள மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக தமிழர்கள் இருந்தும் அவர்கள் உரிமை பறிக்கப்பட்டு இலங்கை அரசால் இரண்டாம் தர குடிமக்களாக்கப்பட்டுள்ளனர்.

உணவு, உறைவிடம் எல்லாம் அந்தத் தமிழினத்தார்க்கு மறுக்கப்படுகிறது. வாழ்விழந்த அவர்கள் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந் நிலையில் இந்திய அரசு, இலங்கை அரசோடு பேசி அவர்கள் வாழ்வுக்கு உத்தரவாதம் பெற்றுத் தர வேண்டும் என இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிருேம்.

4. இலங்கையில், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்குச் சுதந்திரம கேட்கிருர்கள். சர்வதேசச் சட்டப்படியும், மனித உரிமைகள் சாசனப்

அரசை கேட்டுக்கொள்கிருேம்.

7. இலங்கை, மலேசியா பர்மா, சிங்கப்பூர், மொரிசியஸ், பிஜி, கயாளு, வியட்நாம், இந்தோனேஷியா, கென்யா, டமகாஸ்கஸ், தாய்லாந்து ஆகியவற்றில் தமிழ் உணர்ச்சி உள்ள தமிழர்களே தூதுவர்களாக நியமிக்கப்பட வேண்டுமென இந்திர அரசைக் கேட்டுக் கொள்கிருேம். அத்துடன், வெளி நாட்டிலாகாவில் தமிழ்ப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த உலகத் தமிழர் பாதுகாப்புப் பேரவை கேட்டுக் கொள்கிறது.

# தமிழ் விழாவா? தமாஷாவா?

## மஜீத் திட்டம் வெறும் கண்துடைப்பு!

வானெலிதகவல்பிரதி அமைச்சரினல்மூதூரிற்பிரம்மாண்டமான தமிழ் விழா ஒன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அவர் கூட்டிய பூர்வாங்கக் கூட்டம் மூதூர்ப் பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்றபோது, அக்கூட்டத்தில் மூதூர்ப் பிரிவுக் காரியாதிகாரி, மூதூர்ப்பட்டின சபை உபதலைவர், மக்கள் வங்கி மூதூர்க்கிளை முகாமையாளர், மூதூர் மகாவித்தியாலய அதிபர், சேனையூர் மகாவித்தியாலய பிரதி அதிபர் உட்பட சுமார் 15 பேர் கலந்துகொண்டனர்.

கூட்டத்திற் பேசிய பிரதி அமைச்சர் விழாச் செலவுகளுக்கான (20000/-) இருபதினையிரம் ரூபாவைத் திருக்கோணமலைப் பிரிவிலுள்ள மதுபான விற்பனையாளர்களிடமிருந்துதான் பெற்றுத் தருவதாகவும் அத்தோடு நாட்டின் நாலு திக்கிலிருந்தும் எழுத்தாளர்கள் பலரையும், இலங்கை வானெலிக் கூட்டுத்தாபனத்தின் நடிகர்கள், நாட்டியக்காரர்கள், பாடகர்கள், வாத்தியக் கோஷ்டியினர் ஆகிய பல கலைஞர்களையும் அரசாங்கச் செலவிற்தானே வரவழைப்பதாகவும், விழா நிகழ்ச்சிகளைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின்மூலம் படம் பிடிக்க ஒழுங்குகள் செய்வதாகவும் கூறினர்.

இதையிட்டு மூதூரைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில் "தனது சொந்தக் கிராமமான கிண்ணியாவிற் பிறந்தவரும் பிரபல கவிஞருமான காலஞ்சென்ற 'அண்ணல்' அவர்களை தான்அரசோச்சும் வானெலி நிகழ்ச்சிகளிற் பங்குபெற முடியாமல் ஒதுக்கித்தள்ளிய பிரதி அமைச்சர், தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது.

"மேலும் நல்ல உணவுச் சாலைகளோ, விடுதிகளோ இல்லாத மூதூரில் சாராயக் கடைக்காரர்களின் பணத்தைமட்டும்கொண்டுகலைஞர்களையும்எழுத்தாளர்களையும் உபசரித்துவிட முடியாது; அந்த 'ஹாருமான்' சொத்தை 'அம்பாளிக்க' எந்த முஸ்லீமும் விரும்பமாட்டான். சரஸ்வதி பூஜை போன்ற பாடசாலைச் சமய நிகழ்ச்சிகளைக்கூடத் தடைபண்ண முயற்சிக்கும் பிரதி அமைச்சரின் முயற்சிக்குத் தமிழ் மக்களிடமிருந்தும் ஆதரவு கிடைக்கமாட்டாது. இந் நிலையில் பொதுமக்களின் ஆதரவற்ற ஒரு 'தமாஷா'வை நடத்தலாமே ஒழியத் தமிழ்விழாநடவாது." என்று குறிப்பிட்டார்.

## கண்ணகி போன்ற...

—2-ம் பக்கத் தொடர்

பற்றிச் சிந்திக்கும் நமக்கு இப்படியான விழாக்கள் தான் மக்களுக்கு விடுதலை பற்றிவிளக்கவேண்டிய சந்தர்ப்பங்கள். இவற்றைத் தவறவிடக்கூடாது. ஏனென்ருல் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் நாம் விடுதலை அடையாவிட்டால் இவை போன்ற விழாக்கள் நடத்துவதற்கே சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடலாம். விழா நடத்தும் உரிமையை கூட அரசு பறித்துவிடும் எனவே சைவமும் தமிழும் தழைப்பதற்கு விடுதலை காண்பது மிகமிக அவசியம்."

—தகவல்: கு. நாகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

கொழும்பு தெற்கு இடைத்தேர்தல்

# வெற்றிகரமாகப் பின்வாங்கியது அரசாங்கம்!

## தமிழனின் அடிமைத்தனத்தை நிரூபித்த மற்றோர் உதாரணம்!

**1975 மே 27ம் திகதிக்கு பின்னர்தொடர்ந்து பதவியிலிருக்க ஐக்கியமுன்னணி அரசாங்கத்துக்கு அருகதையில்லை என்பதை இடைத்தேர்தல் ஒன்றின்மூலம் நிரூபித்துக்காட்டிட எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது கொழும்புதெற்கு தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினமா செய்தாரல்லவா? இந்த இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இத்திங்கள் 19ம் திகதி தாக்கல் செய்யப்படுகின்றன.**

இடைத்தேர்தலில் தமக்குப்பெரிய பட்டை நாமமே கிடைக்கும் என்பதைப் புரிந்துகொண்ட ஆளும் ஐக்கிய முன்னணி, ஜே. ஆருடன் போட்டியிடுவதில்லையென்று அறிவித்து வெற்றிகரமாகப் பின்வாங்கிவிட்டது. இப்பொழுது சுயேச்சை வேட்பாளராக காமினி பொன்சேகா என்ற சினிமா நடிகரை நிறுத்திவைக்கப் போகிறதாம்!

இதேவேளையில் தமிழ் அரசியல் வட்டாரங்களில் ஒரு பாரிய உண்மை எடுத்துக் காட்டப்படுகிறது.

தமிழினத்தின் தலைவர் தந்தைசெல்வா தமது காங்கேசன்துறை தேசிய அரசப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்தபோது இதற்கான இடைத்தேர்தலை உடனடியாக நடத்தாது இரண்டாண்டு காலம் பொய்ச் சாட்டுக்களை கூறி இழுத்தடித்து வந்த அரசாங்கம்—சிங்கள இனத்தின் தலைவர்களில் ஒருவரான (அவர் எதிர்க்கட்சிக்காரராக இருந்தபோதும்) திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவி விலகியதும் அதற்கான இடைத்தேர்தலை தாமதமின்றி உடனடியாக நடத்த முன்வந்திருக்கிறது.

இது ஒன்றே தமிழ் இனத்தை — ஆளப்படும் அடிமை இனமாக கருதி எவ்வளவு தூரம் சிங்களவர்கள் பாரபட்சம் காட்டி புறக்கணிக்கிறார்கள் என்பதையும்—ஆளும் இனமாகிய தங்களுக்குள் — அரசியலில் எவ்வளவு தூரம் குத்துவெட்டுக்கள் இருந்தபோதிலும்—எவ்வளவு தூரம் நியாயமுடன் நடந்துகொள்கிறார்கள் என்பதையுமே எடுத்துக்காட்டியிருக்கிறது!

ஆம், சிங்கள இனம் ஆளும் இனமாக இருப்பதையும் தமிழினம் ஆளப்படும் இனமாக இருப்பதையும் இந்தச் சம்பவமும் நன்கு எடுத்துக் காட்டுவதாக அமைகிறது!

### வீரன் வண்ணை...

—1-ம் பக்கத் தொடர்

திகதி வண்ணை ஆனந்தனை விடுதலை செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும், இந்த உத்தரவை உடனடியாக அமுலுக்கு கொண்டு வராமல் இம்மாதம் 10ம் நாள் வரை இழுத்தடிப்பதற்கு காரணமாக இருந்தவர் வெறிபிடித்த ஒரு தமிழ் சி.ஐ.டி. அதிகாரியே என்று தெரிகிறது.

[illegible] ருந்துவிட்டு வெளியே வந்தபோதும் கொஞ்சம்கூட களைப்பின்றி கலகலப்புடன் காணப்படும் வண்ணை ஆனந்தன், தொடர்ந்தும் இனத்தின் விடுதலைக்கு உழைக்க இருப்பதாக தெரிவித்தார். வண்ணை ஆனந்தனுக்கு 12-6-75 யாழ்ப்பாணத்தில் எழுச்சிமிக்க குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

### இவ்வாரப் பகிடி!

"நான் பல்கலைக்கழக வளாகத்தை திறக்க யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது பெருமளவில் மக்கள் என்னைக் குதூகலமாக வரவேற்று பெருமைப்படுத்தினார்கள்!"

பிரதமர் (தினகரன் 8.6.75)


கெப்பிட்டல் செல்லமகால் 9-வது ஜனத்திரள் வாரம்

8-வது வாரம்



சிவகுமார், விஜயகுமார், கே. ஏ. தங்கவேலு, வீரராகவன், ஜெயசித்திரா, விதுபாலா, மனோரமா ஆகியோர் நடித்த

பொண்ணுக்கு தங்க மனசு

டைரக்ஷன்: தேவராஜ்—மோகன்.

நடிகர்கள்:
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன்,
தேங்காய் சீனிவாசன் - எஸ் வி. ராமதாஸ்,
வி. கோபாலகிருஷ்ணன்-ஜெஸ்டின்-சாண்டோ,
எம். எம். ஏ. சின்னப்பா தேவர்.


நடிகைகள்:
கே. ஆர். விஜயா,
குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி
இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

தேவர் பிலிம்ஸ்

நல்ல நேரம்

(ஈஸ்ட்மென் கலர்)





10வது வாரம்

கிங்ஸ்லி—வெலிங்டன்

விஜயா (மட்டு நகர்)

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்,
உஷா நந்தினி ஸ்ரீகாந்த். ஜெயா,
—நடித்த—

சுகநாதனின்

ராஜபார்ட் ரங்கதுரை

([illegible])



இப்பொழுது காட்சியளிக்கிறது

பிளாஸா திரையில்

சிவாஜி — மஞ்சுளா — மனோகர்
—நடித்த—

எங்கள் தங்க ராஜா

(ஈஸ்மென் கலர்)

கெப்பிட்டல் 2வது வாரம்

● சிவாஜி ● வாணிஸ்ரீ
● பாரதி ● சிவகுமார்

நடித்த

உயர்ந்த மனிதன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயகா வீதி 194 எ. இலக்கத்தில் 1975ம் வருடம் ஜூன் மாதம் 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org